**மத்திய மாகாண கல்வித் திணைக்களம்**

**மாத்தளை, கலேவெல, நுவரெலியா, நாவுல மற்றும் ஹங்குரனகெத கல்வி வலயங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்.**

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மாத்தளை, கலேவெல, நுவரெலியா, நாவுல மற்றும் ஹபுகுரன்கெத கல்வி வலயங்களுக்கான பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்காக இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் I ஆவது தர உத்தயோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்-**

01. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் I ஆவது தர உத்தியோகத்தராக இருக்க வேண்டும்.
02. நிறுவனக் கோவையின் II வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள I ஆவது அல்லது II ஆவது அட்டவணையின் கீழ் வரும் குற்றத்திற்காக முந்தைய 5/7/10 ஆண்டுகளில் தண்டிக்கப்படாத ஒருவராக அல்லது எந்த விதத்திலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாத நபராக அல்லது அவ்வாறான நடவடிக்கைக்கு இலக்காகக் கூடிய நபராக இருக்க கூடாது.
03. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக 05 ஆண்டுகளுக்குள் சம்பள உயர்வுகளைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.
04. விண்ணப்பிக்கும் திகதியில் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மேலே உள்ள அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.
05. மத்திய மாகாணத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியில் தற்போது கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் எனில் அந்தப் பதவியில் குறைந்தது மூன்று (3) ஆண்டுகள் நிறைவு செய்திருக்க வேண்டும்.

**குறிப்பு -**

தகுதியை நிரூபிக்கும் வகையில் அனைத்து கல்வி மற்றும் பிற சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள், தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்த அனுப்ப வேண்டும்.

**தெரிவு செய்யும் நடைமுறை-**

மத்திய மாகாண பிரதான மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரால் பரிந்துரைக்கப்பட்ட நேர்காணல் குழுவினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் ஊடாக புள்ளிகளை வழங்குவதன் மூலம் (தொடர்புடைய புள்ளி வழங்கும் நடைமுறை இணைப்பு 02 இல் இணைக்கப்பட்டுள்ளது) தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் -**

அனைத்து விண்ணப்பங்களும் முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்டு 16.01.2024 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் "செயலாளர், பிரதான மற்றும கல்வி அமைச்சு, மத்திய மாகாண சபை வளாகம், பல்லேகலை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப் உறையின் மேல் இடது மூலையில், "மத்திய மாகாண கல்வித

திணைக்களத்தின் மாந்தளை, கலேவெல, நுவரெலியா, நாவுல மற்றும் ஹங்குரங்கெத கல்வி வலயங்களில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்." எனக் குறிப்பிடப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதிக்குள் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்யாதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தொலைந்த அல்லது தாமதமான விண்ணப்பங்கள் தொடர்பான எந்தவொரு முறைப்பாட்டையும் மத்திய மாகாண கல்வி அமைச்சு ஏற்றுக்கொள்ளாது.

எச்.எம்.எம்.யூ. பீ. ஹேரத்
செயலாளர்
பிரதான மற்றும் கல்வி அமைச்சு
மத்திய மாகாணம்